செய்தி வெளியீடு எண்: 71 நாள்: 26.09.2021.

**தேனி மாவட்டம்**
**மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில்**
**தடுப்பூசி செலுத்தும் பணியினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள்**
**ஆய்வு மேற்கொண்டார்:-**

**********

தேனி மாவட்டம், தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகம், பழனிசெட்டிபட்டி பழனியப்ப வித்யாலயா தொடக்கப்பள்ளி, குன்னூர் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி, திருமாலபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, முத்தனம்பட்டி அரசு கள்ளர் ஆரம்ப பள்ளி, சண்முகசுந்தரபுரம் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி, ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகம், ஸ்ரீரெங்காபுரம் ஊராட்சி கலையரங்கம், முதலக்கம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம், குள்ளப்புரம், எருமலைநாயக்கன்பட்டி, எ.வாடிப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் மற்றும் ஜி.கல்லுப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம், எண்டப்புளி மார்க்கெண்டய ஆரம்ப பள்ளி, வடபுதுப்பட்டி முத்தாலாம்மன் இந்து துவக்க பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில், தடுப்பூசி செலுத்தும் பணியினை இன்று (26.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களுக்கு வருகைபுரிந்த பொதுமக்கள் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், உள்ளிட்ட அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் கடைபிடிக்கப்படுகிறதா என்பதனையும், கொரோனா தடுப்பூசி முகாமிற்கு வருகை தந்த நபர்களின் எண்ணிக்கை குறித்த பதிவேடு, கொரோனா தடுப்பூசி முதல் கட்டம், இரண்டாம் கட்டம் செலுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, தடுப்பூசி மருந்துகள் இருப்பு, முகாம்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள், அடிப்படை வசதிகள், அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் ஆகியவைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா நோய்த் தொற்று மூன்றாம் அலை வராமல் தடுத்திடும் பொருட்டு, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தற்போது தேனி மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் நேற்றைய தினம் (25.09.2021) வரை 6,98,244 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக 5,25,672 தடுப்பூசிகளும், இரண்டாம் தவணையாக 1,72,572 தடுப்பூசிகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு 12,047 தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப்பகுதிளில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடத்துவதற்கு 193 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 52,070 நபர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில், தற்சமயம் பிற்பகல் 1.00 மணி நிலவரத்தின்படி மட்டும் 45,130 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும். தொடர்ந்து, அந்தந்த ஊராட்சி பகுதிகளில் 18-வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத விடுபட்ட நபர்களை கண்டறிந்து, உடனடியாக தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசியின் முக்கியதுவம் குறித்து, பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பூசி செலுத்துவதன் மூலம் மட்டுமே நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்திட முடியும். தற்போது, மூன்றாம் அலையினை கருத்தில் கொண்டும், பொதுமக்களின் நலன் கருதியும், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பினை அளித்திட வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக, தேனி-அல்லிநகரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் உழவர் சந்தையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, கொரோனா அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்காத நபர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிட்டு, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியே கடைபிடித்தல் குறித்து பொதுமக்களிடம் அறிவுறுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஆர்.தண்டபாணி, பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ. ரிஷப், இ.ஆ.ப., உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) முத்துக்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அண்ணாதுரை, தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் சுப்பையா, ஊராட்சி மன்றத்தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**